**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி -12**

# ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) - தமிழ் - பாடத்திட்டம் 2018 முதல்

(இணைவுக் கல்லூரிகள்)

**நோக்கம்:** அறிவுத்துறையில் உயர் நிலையில் தர்க்கத்தின் அடிப்படையில் சிந்திப்பதற்கும் ஆய்வின் அடிப்படைகளைப் புரிந்து கொண்டு ஆய்வுச் சிந்தனைகளை உலகளாவிய நெறிமுறைகளுடன் வெளிப்படுத்தவும் பயிற்றுவித்தல்.

**கற்றல் பயன்:** எதனையும் கேள்விகளுக்குட்படுத்தித் தர்க்க அடிப்படையில் சிந்தனையைச் செலுத்தி மெய்மைகளைக் காணும் திறனைப் பெற்றிருத்தல். உலகளாவிய நெறிமுறைகளின் அடிப்படையில் தரமான ஆய்வுரைகள், கட்டுரைகள் எழுதும் தன்னம்பிக்கைப் பெற்றிருத்தல்.

| **வ.எண்** | **தாள்கள்** | **மதிப்பலகுகள்** | **கற்பித்தல் காலம்** |
|---|---|---|---|
| 1. | ஆராய்ச்சி நெறிமுறைகள் | 4 | 4 |
| 2. | திறனாய்வு முறைகளும் அணுகுமுறைகளும் | 4 | 4 |
| 3. | **விருப்பத்தாள்**<br>தமிழ் இலக்கணவரலாறு<br>**(அல்லது)**<br>தமிழில் கவிதையியல் பார்வைகள்<br>**(அல்லது)**<br>தமிழில் கதையியல் பார்வைகள்<br>**(அல்லது)**<br>இலக்கியமும் பண்பாட்டு மானிடவியலும் | 4 | 4 |
| 4 | ஆய்வேடு | 12 | -- |
| | **மொத்தம்** | **24** | **--** |

## 1. ஆராய்ச்சி நெறிமுறைகள்

**L T P C**
**4 0 0 4**

### நோக்கம்

1. ஆய்வின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு ஆய்வுச் சிந்தனைகளை நெறிப்படுத்தவும் வெளிப்படுத்தவும் பயிற்றுவித்தல்.
2. ஆய்வேட்டினை எழுதும் பயிற்சியில் தன்திறனை வெளிப்படுத்தப் பழகுதல்
3. உலகளாவிய ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பயிற்றுவித்தல்.

### கற்றல் பயன்:

1. உலகளாவிய ஆராய்ச்சி நெறிமுறைகள் குறித்த அறிவைப் பெறல்.
2. தர்க்கத்தின் அடிப்படையில் சிந்திக்கும் ஆற்றல் பெறல்.
3. ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றி எழுதும் திறன் பெறல்

**அலகு: 1 ஆய்வியல் அறிமுகம் : 10 மணிநேரம்**

ஆய்வின் இலக்கணம் - ஆய்வுப் பொருள் - வழிகாட்டி - ஆய்வாளர் பண்புகள் - தலைப்புத் தேர்வுகள் - தலைப்புப் பண்புகள் - வகைகள். ஆய்வுத் திட்டமிடல் - அடிப்படைக் கருத்துகள் - கருதுகோள்கள் - வகைகள் - இயல்புகள் - ஆய்வியலாளரின் பண்புகள் - ஆய்வின் வகைப்பாடுகள் கோட்பாட்டாய்வு - வகைப்படுத்துதல் ஆய்வு - பொருத்திக்காட்டல் ஆய்வு.

**அலகு: 2 தரவு திரட்டல் : 12 மணிநேரம்**

ஆய்வின் முதல் நிலை - கருவிகளைத் தொகுத்தல் - தரவு திரட்டுதலும் தரவு திரட்டுவதற்குரிய தரவு மூலங்களைக் கண்டறிதலும் - முதன்மை ஆதாரங்களும் துணைமை ஆதாரங்களும் எவை என அறிதல் - ஆய்வின் இரண்டாம் நிலை - தரவுகள் தொகுத்தல் - தொகுக்கும் முறை - குறிப்பெடுக்கும் முறை - வகைப்படுத்தும் முறை - துணைநூற்பட்டியல் - நோக்கீட்டு நூற்பட்டியல் - நூலடைவு

**அலகு: 3 கருவிகள் :12 மணிநேரம்**

ஆய்வின் மூன்றாம் நிலை - ஆய்வில் உத்திகளைக் கடைப்பிடிக்கும் முறை - நேர்காணல் - வினாநிரல் - வினாநிரல் வகைகள் - வினாநிரல் உருவாக்கும் முறை - களஆய்வு -களஆய்வு செய்முறை – முன் அனுபவம் எச்சரிக்கைகள் - வழிகாட்டிகள் முதலியன ஆய்வின் நான்காம் நிலை – தரவுகளை ஒருங்கிணைத்தல் - ஆய்வுச் சிக்கலை விடுவிக்க முன்மொழிதல் - உறுதி செய்தல்

**அலகு: 4 ஆய்வறிக்கை எழுதுதல் : 12 மணிநேரம்**

ஆய்வேட்டின் உருவாக்கம் - புறநிலைக்கட்டமைப்பு, அகநிலைக்கட்டமைப்பு-ஆய்வுப் பொருண்மைக்கேற்ப இயல் வகுத்தமைத்தல் - இயல்களின் உட்பிரிவுகள் - இயலின் மையப் பொருண்மை - இயல் வரிசை முன்னுரையும் முடிவுரையும் ஆய்வேட்டின் நடை-பத்திப் பிரிப்பு மேற்கோள் காட்டல், நிறுத்தக் குறி, வினாக் குறி, உணர்ச்சிக் குறி, அரைப்புள்ளி, முக்காற் புள்ளி, முற்றுப்புள்ளி, மேற்கோள் குறி, ஒற்றை, இரட்டை மேற்கோள் குறிகள் - அடிக்கோடிடல்- அடைப்புக் குறியிடல் ஆகியன பற்றிய விளக்கம் - ஆய்வில் பிறர் கருத்தை ஏற்றலும் மறுத்தலும் - முன் ஆய்வுகளை மறைக்காமை - எழுத்துத் திருட்டின்மை - நேர்மை - பின்னிணைப்புகள் - படங்கள் வரைவுகள் - ஆவணங்கள் - நூற்பட்டியல்கள் - வினாநிரல்கள் - அறிக்கைகள் - ஆய்வில் நீக்க வேண்டிய குற்றங்கள் - நன்னூல் கூறும் பத்துக் குற்றங்களும் அழகுகளும்

**அலகு: 5 கற்பித்தல்: 14 மணிநேரம்**

கற்பித்தலின் நோக்கங்கள், கற்பித்தலின் படிநிலைகள் - கற்பிக்கும் முறைகள்: விரிவுரை முறை, கலந்துரையாடல் முறை, கண்டறிவுக் கற்றல் முறை, விசாரணைமுறை, சிக்கல் விடுவிப்பு முறை, திட்டச்செய்முறை, கருத்தரங்கம் - கற்பித்தலில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல்: தனிநபர் வழிப்படுத்தல், கானொலி வழியாக அழுத்தமாக அளிப்பு செய்தல், ஆவணப்படுத்தல் - மதிப்பீட்டுமுறை: உருவாக்கம் சர்ந்தது, ஒருங்கிணைக்கத்தக்க, தொடர் மற்றும் விரிவான மதிப்பீடு – பின்குமரப்பருவ உளவியல்: பொருண்மை, பருப்பொருள்சார்ந்த, அறிதல்சார், உணர்வுசார்ந்த, சமூக மற்றும் நெறியியல் சார்ந்த வளர்ச்சி – பின் குமரப்பருவத்தினருக்குக் கற்பித்தல்.

**பார்வை நூல்கள்:**


1. தமிழண்ணல், இலக்குமணன்,1977: ஆய்வியல் அறிமுகம், மீனாட்சி நிலையம், மதுரை
2. முத்துச்சண்முகம்,சு.வேங்கடராமன்,2015: இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள், முத்துப் பதிப்பகம், மதுரை
3. க.சொக்கலிங்கம், 2014: உரைநடைத் தெளிவு (ஓர் அறிமுகம்) குமரன் பதிப்பகம் சென்னை.
4. ருாமசாமி.அ., ஸ்டிபன், ஞா., 2017: ஆய்வுத் தளங்களும் முறையியல்களும், பதிப்புத்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
5. Sampath,K,Panneerselvam.A.&Santhanam.S.1984: Introdution to education teachnolog. (2nd revised ed.). New Delhi: Sterling publishers.
6. Sharma,S.R.,2003: Effective classroom teaching modern methods, tools &techniques .Jaipur:Mangal Deep .
7. Vedanayagam,E.G.,1989: Teaching technology for college teachers. New York:Sterling Publishers.

## 2. திறனாய்வு முறைகளும் அணுகுமுறைகளும்

**L T P C**
**4 0 0 4**

### நோக்கம்:

1. திறனாய்வின் வகைகள் மற்றும் திறனாய்வு அணுகுமுறைகளை அறிதல்.

2. ஆய்வில் பயன்படுத்தும் முறையைக் கற்பித்தல்

### கற்றல் பயன்:

1. தர்க்கத்தின் அடிப்படையில் சிந்தித்து மெய்மைகளைக் காணும் திறன் பெற்றிருத்தல்.

2. திறனாய்வு முறைகளைப் பின்பற்றி ஆய்வுரை எழுதும் ஆற்றல் பெறல்.

**அலகு: 1 திறனாய்வு அறிமுகம்: 10 மணிநேரம்**

திறனாய்வு விளக்கம் - சால் விளக்கம், அடிப்படைகள், அணுகுமுறை, நோக்கமும் பணியும், நடைமுறைகள், திறனாய்வாளன் தகுதிகள், திறனாய்வின் மூன்று மையங்கள்: பனுவல், எழுத்தாளர், வாசகர் - இலக்கிய வடிவங்கள் - - திறனாய்வாளரின் தகுதிகள்- இலக்கியத் திறனாய்வின் பயன்கள்- நோக்கமும் பணியும் - நடைமுறைகள்- விருப்புவெறுப்பு - பன்முகவியம் - பல்துறைச்சார்பு – தவறானப் பயன்பாடு – நீளும் எல்லைகள்.

**அலகு: 2 திறனாய்வு முறைகள்: 10 மணிநேரம்**

விளக்கமுறை, ஒப்பீடு, மதிப்பீடு, ரசனை, பாராட்டு, இலக்கியவகை நிலையியல் - வேறுபாடுகள்.

**அலகு:3. திறனாய்வு அணுகுமுறைகள்: 10 மணிநேரம்**

அறநெறி, சமுதாயவியல், வரலாற்றியல், உளவியல், தொல்படிமவியல், மொழியியல், உருவவியல், தலித்தியம், பெண்ணியம்.

**அலகு:4. தமிழ்த் திறனாய்வு வரலாறு: 12 மணிநேரம்**

சிறுபத்திரிகை சார்ந்த விமரிசன வரலாறு, கல்விப்புல ஆய்வு வரலாறு - ஆய்வு, மதிப்புரை, ஆய்வேடு, நோக்க வேறுபாடுகள்.

**அலகு:5 நுண் வாசிப்பு:16 மணிநேரம்**

1. தி.சு. நடராசன், 2016, திறனாய்வுக் கலை: கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

2. அ.அ. மாணவாளன்- 20 ஆம்நூற்றாண்டு இலக்கியத் திறனாய்வு 1974 சாகித்ய அகாடெமி வெளியீடு, புதுடெல்லி.

3. க. பஞ்சாங்கம், 1982 , தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அன்னம் பதிப்பகம்,

4. காமராசு.இரா.2001 தமிழ்ச் சிற்றிதழ்களின் வழி உருவான நவீனத் திறனாய்வுப் போக்குகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

5. Barry, Peter 1995: BEGINNING THEORY: An Introduction to Literary and Cultural theory, Manchester University Press, Manchester and New York

## 3. தமிழ் இலக்கண வரலாறு

**L T P C**
**4 0 0 4**

### நோக்கம்

1. தமிழ் இலக்கண வரலாற்றை அறிந்து கொள்ளுதல்

2. தமிழ் இலக்கண நூல்கள் குறித்தப் பார்வையை உருவாக்குதல்

### கற்றல் பயன்:

1. தமிழில் இலக்கணம் தோன்றி வளர்ந்த வரலாறு பற்றியத் தெளிவு பெற்றிருத்தல்.

2. சமூகப் பண்பாட்டு மாற்றங்களினால் இலக்கணத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்திருத்தல்.

**அலகு:1. தமிழ் இலக்கண வரலாறு அறிமுகம்: 10 மணிநேரம்**

மறைந்துபோன இலக்கண நூல்கள் - எழுதப்பட்டுள்ள நிலை – சரியான வரலாறு இல்லாத நிலைமை - வெளிவந்துள்ள இலக்கண வரலாறு குறித்த நூல்கள்

**அலகு.2 .ஒழுங்குப்படுத்தப்பட்ட முறையான வரலாற்றின் தேவை: 10 மணிநேரம்**

தற்கால அறுவகையான இலக்கண வளர்ச்சி - அகராதிகள் - நிகண்டுகள் - உரைகள் போன்றவற்றின் வளர்ச்சி. இலக்கணநூல்கள் - தொல்காப்பியம் - வீரசோழியம் - இலக்கணவிளக்கம் - தொன்னூல் விளக்கம் - முத்துவீரியம் - சுவாமிநாதம் - நன்னூல் - அறுவகை இலக்கணம்

**அலகு:3. எழுத்து, சொல் இலக்கணம் உணர்த்தும் நூல்கள்: 10 மணிநேரம்**

நேமிநாதம் - நன்னூல் - பிரயோக விவேகம் - இலக்கணக் கொத்து - தமிழ்நூல் - தமிழ்க்காப்பு இயம்

**அலகு: 4. பொருள் இலக்கண நூல்கள்: 10 மணிநேரம்**

இறையனார் களவியல உரை - பன்னிருபடலம் - புறப்பொருள் வெண்பாமாலை - நம்பியகப்பொருள் - தமிழ் நெறி விளக்கம் - களவியற்காரிகை - மாறனகப்பொருள்- யாப்பு, அணி இலக்கண நூல்கள் - அவிநயம், யாப்பருங்கலம் - யாப்பருங்கலக்காரிகை - யாப்பிலக்கணம் - சிதம்பரச் செய்யுட் கோவை - மாறன்பாப்பாவினம் - விருத்தப்பாவியல் - தண்டியலங்காரம் - மாறனலங்காரம் - அணியிலக்கணம் - பாட்டியல்

**அலகு: 5. நுண்வாசிப்பு:20 மணிநேரம்**

1. சோம.இளவரசு: 2003: இலக்கண வரலாறு, மெய்யப்பன் பதிப்பகம், , சிதம்பரம்.

2. ஆ.வேலுபிள்ளை: 1979: தமிழ் வரலாற்றிலக்கணம். பாரி புத்தகப் பண்ணை, சென்னை

3. சிவத்தம்பி.கா, 1982: இலக்கணமும் சமூக உறவுகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

4. அ.சண்முகதாஸ், 1982: தமிழ் மொழி இலக்கண இயல்புகள், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

5. செ.வை.சண்முகம், 1994: இலக்கண உருவாக்கம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்

## 4. தமிழில் கவிதையியல் பார்வைகள்

**L T P C**
**4 0 0 4**

### நோக்கம்:

1. நீண்ட தமிழ்க் கவிதைப் போக்கை அதன் கவிதையியல் சார்ந்து புரிந்து கொள்ளுதல்.

2. கவிதை சார்ந்த செல்நெறிகள் சமூக மாற்றங்களினால் கவிதை மரபில் ஏற்பட்ட மற்றங்கள் ஆகியவற்றைக் கற்பித்தல்.

3. தமிழ்க் கவிதை மீது திறனாய்வாளர்கள் முன்வைத்த கருத்துக்களை அறியச் செய்தல்.

### கற்றல் பயன்:

1. தமிழ்க் கவிதை வரலாறு வகைமை, உள்ளடக்கம், செல்நெறி ஆகியவற்றின் அடிப்படையில் அறியப்பெறல்.

2. சமூகத்திற்கும் கவிதைக்குமிடையிலான உறவுகளை அறியப்பெறல்.

**அலகு: 1 திணைக்கோட்பாடும் கவிதையும் :10 மணிநேரம்**

தமிழின் கவிதையியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இருந்து உருவாக்கப்படும். .உரிப் பொருள்களின் வகைப்பாடு அவற்றை வெளிப்படுத்த உதவும். நிலவியல் கூறுகளான கருப் பொருட்கள், அதன் பரப்பெல்லைகளான முதல் பற்றிய புரிதலோடு கவிதைகளைப் படித்தல். தொல்காப்பியம் வகைப்பாடு செய்யும் அகம், புறம், என்பதன் அடிப்படையில் சங்க இலக்கியத்தை வாசிக்கும் ஆய்வுகள்.

**அலகு: 2 அறக் கவிதைகளின் இயல்பு: 10 மணிநேரம்**

கவிஞனின் இடம். கேட்போரின் இடம், நம்பிக்கை, சமயம், அரசு ஆகியவற்றின் விதிகள் அறங்களாக மாறுதல்- பக்திக் கவிதைகளின் நோக்கமும் கவியின் இடமும்.

**அலகு:3 பின்னிடைக்காலக் கவிதைகள்: 10 மணிநேரம்**

பரணி, பிள்ளைத் தமிழ், உலா, கலம்பகம், அந்தாதி, மடல், கோவை, பள்ளு, நொண்டி நாடகம் ஆகியன பற்றிய இலக்கிய வகைமையெனப் பிரித்துக் கற்கச் செய்ய வேண்டும். தனிப்பாடல் திரட்டின் கவிதைச் சுவைகளைப் பொது நிலைக் கவிதையியலாகக் கற்பிக்கும் முறைமை..

**அலகு 4 சமகாலத்தன்மை: 10 மணிநேரம்**

தோற்றம் - நவீனத்துவ வரவு அரசியல் பின்புலம். தேசியம், இனம், சர்வதேசியம், காலனியம், பின்காலனியம் போன்றவற்றை விளக்கிக் காட்டுதல். இவற்றோடு இணைந்து இலக்கிய

இயக்கங்களின் வரவும் தாக்கமும் ஏற்பட்ட நிலையையும் விளக்குதல். புதுக்கவிதையின் தோற்றம் - அகவயக் கவிதைகள், புறவயக் கவிதைகள், தலித்தியன் பெண்ணியக் கவிதைகளுக்கிடையேயான ஒற்றுமை, வேற்றுமைகள். பின்நவீன கவிதைப் போக்கை அறிமுகம் செய்து கொள்ளுதல்.

**அலகு 5 நுண் வாசிப்பு: 20 மணிநேரம்**


1. வ.சுப.மாணிக்கம், தமிழ்க் காதல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் 2012
2. பெ.மாதையன், 2011: தமிழ் செவ்வியல் இலக்கியங்கள்: காலமும் கருத்தும், என்.சி.பி.எச், சென்னை.
3. அ.மணவாளன், 2004: தமிழ்ப் பக்தி இலக்கியம்: சாகித்ய அகாடெமி வெளியீடு, புதுடெல்லி.
4. துரை.சீனிச்சாமி, 2010: இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை: புதிய போக்குகள்,தோற்றம், வளர்ச்சி, ஐந்திணை பதிப்பகம்: சென்னை,
5. இராஜமார்த்தாண்டன், 2003: நவீனத் தமிழ்க் கவிதை வரலாறு, தமிழினி பதிப்பகம், சென்னை.

## 5. தமிழில் கதையியல் பார்வைகள்

**L T P C**
**4 0 0 4**

### நோக்கம்:

1. தமிழில் கதைசொல்லும் இலக்கியங்களின் உருவாக்கமும் வளர்ச்சியும் பற்றியப் புரிதலை உருவாக்குதல்

2. கதை சார்ந்த செல்நெறிகள் சமூக மாற்றங்களினால் கதை மரபில் ஏற்பட்ட மற்றங்கள் ஆகியவற்றை அறியச் செய்தல்.

3. தமிழ்க் கதை மீது திறனாய்வாளர்கள் முன்வைத்த கருத்துக்களை எடுத்துரைத்தல்.

### கற்றல் பயன்:

1. தமிழ்க் கதை வரலாற்றை வடிவம், வகைமை, உள்ளடக்கம், செல்நெறி ஆகியவற்றின் அடிப்படையில் அறிந்திருத்தல்.

2. சமூகத்திற்கும் கதைக்குமிடையிலான உறவுகளை அறிந்திருத்தல்.

**அலகு.1 செய்யுளியல் : 10 மணிநேரம்**

தொல்காப்பியச் செய்யுளியலில் கதைப் பற்றியக் குறிப்புகள் - பிசி, உரையிட்ட பாட்டுடைச்செய்யுள். சிலப்பதிகாரம், மணிமேகலை கதை கூற்று முறைமைகள்.

**அலகு:2 தண்டியலங்காரம்: 10 மணிநேரம்**

காப்பிய இலக்கணம், அதனைப் பின்பற்றிய காப்பியங்கள்

**அலகு: 3. செய்யுள் வழி சொல்லப்பட்ட கதைகள்: 10 மணிநேரம்**

கட்டமைப்பு, உட்கூறுகள், மூலப்படிவங்கள். நாட்டார் கதைப்பாடல் மரபுகள்- தெய்வக்கதைகள், வரலாற்றுக்கதைகள், வட்டாரக்கதைப்பாடல்கள்,

**அலகு: 4 நவீனக் கதைக் கூற்று முறைகள்: 10 மணிநேரம்**

நாவல் வடிவம், சிறுகதை வடிவங்கள்

**அலகு:5. நுண் வாசிப்பு: 10 மணிநேரம்**

1. எஸ்.வையாபுரிப்பிள்ளை,2012, தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம்

2. சி.சு.செல்லப்பா, தமிழ் சிறுகதை பிறக்கிறது, காலச்சுவடு 1974

3. அ.ராமசாமி, நாவலென்னும் பெருங்களம், நற்றிணை, 2016

4. கைலாசபதி,க., தமிழ் நாவல் இலக்கியம், 1977: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை,

5. சிவத்தம்பி, கா., 1978: நாவலும் வாழ்க்கையும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை,

## 6. இலக்கியமும் பண்பாட்டு மானிடவியலும்

**L T P C**
**4 0 0 4**

### நோக்கம்:

1. இலக்கிய மானிடவியல் புலத்தை அறிமுகம் செய்தல்

2. இலக்கிய வாசிப்பிற்கு மானிடவியலின் தேவையை உணர்த்துதல்

3. மானிடவியல் அடிப்படையில் இலக்கியங்களை அர்த்தப்படுத்தி கற்பித்தல்

### கற்றல் பயன்:

1. இலக்கியங்களைப் பல்புலம் சார்ந்த அறிவின் துணையுடன் ஆய்வு செய்யும் திறன் பெற்றிருத்தல்.

2. இலக்கியத்திற்கும் சமூக அறிவியல்களுக்கும் உறவு உள்ளது என்பதை உணர்ந்திருத்தல்.

**அலகு: 1. மானிடவியல் அறிமுகம்: 10 மணிநேரம்**

முழுதளாவிய அணுகுமுறை - மானிடவியலின் நான்கு பரிணாமங்கள். பண்பாடு - விளக்கம் - வரையறைகள் - உண்மையியல் வகை - கருத்தியல் வகை - பண்பாட்டுச் சார்புடைமைக்கொள்கை - பண்பாட்டின் உட்கூறுகள் - பண்பாட்டுக் கூறு - பண்பாட்டுக் கலவை - பண்பாட்டு நிறுவனம் - உட்கூறுகளின் தன்மைகள் - பொருள் சார் கூறுகள் - அறிதல் சார் கூறுகள் - நெறியியல் சார் கூறுகள். பண்பாட்டியல் அமைப்பு - பொருள் சார் பண்பாடும், பொருள் சாராப் பண்பாடும் - உகந்த நிலைப் பண்பாடும் உண்மைப் பண்பாடும் - உள்ளாந்தப் பண்பாடும் வெளிப்படைப் பண்பாடும் - உட்பண்பாடும் எதிர் பண்பாடும் - பண்பாட்டுப் பொருண்மைகள் - பொதுமைகள்.

**அலகு: 2. இலக்கிய மானிடவியல் அறிமுகம்: 10 மணிநேரம்**

இனவரைவியலின் அடிப்படைகள் - இனவரைவியலாளரும் படைப்பாளியும் படைப்பும் இனவரைவியலும் - நாவலும் இனவரைவியலும். - இலக்கிய இனவரைவியல் - இனவரைவியலின் வகைகள் - இனவரைவியலின் இயல்பு - இலக்கியத்தில் இனவரைவியலை அடையாளம் காணுதல் - இலக்கியத் தரவை மானிடவியல் தரவாகக் கொள்ளுதல் - விளக்கமளித்தல் (இலக்கிய இனவரைவியல் கட்டுரை)

**அலகு: 3. பண்பாட்டு மாற்றம்: 10 மணிநேரம்**

பண்பாட்டு மாற்றத்தின் முறைகள் - கண்டுபிடிப்புகள் - பண்பாட்டுப் பேறு - நவீனமயமாதல், தொழில்மயமாதல் - நகரமயமாதல் - உயர்குடி ஆக்கம்-இந்துமயமாதலும்

பிறசமயம் தழுவலும் - பண்பாட்டுப் பரவல் - பண்பாட்டுப் பரவல் கொள்கைகள். - படிமலர்ச்சிக் கோட்பாடும் இலக்கியமும் - படிமலர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படைகள் - கொள்கைகள் - மொழியின் படிமலர்ச்சி - இலக்கியப் படிமலர்ச்சி.

**அலகு: 4. மானிடவியல் அடிப்படையில் திணைக் கோட்பாடு:10 மணிநேரம்**

திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள் - திணை அமைப்பும் படிநிலை வளர்ச்சியும் - திணை அமைப்பும் இனவரைவியலும் - தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும் - மானிடவியல் அடிப்படையில் சங்க இலக்கியம் - உணவு உற்பத்தியும் பரிமாற்ற உறவுகளும் - பதுக்கைகளும் பெருங்கற்படைச் சின்னங்களும் - இரும்புப் பண்பாடு - சங்க இலக்கியத்தில் பேய்கள் - தாலியும் குலக்குறிச் சின்னமும்.

**அலகு: 5.நுணுக்க வாசிப்பு: 20 மணிநேரம்**

பக்தவத்சல பாரதியின்- இலக்கிய மானிடவியல், ஆ.தனஞ்செயனின்; தமிழ் இலக்கிய மானிடவியல், ஆ.சிவ சுப்பிரமணியனின்; இனவரைவியலும் நாவலும், கா.சிவத்தம்பியின் திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள், கா.சுப்பிரமணியனின்; சங்ககாலச் சமுதாய வாழ்க்கையில் மந்திரம், சமயம் ஆகியவற்றின் பங்கு.

**பார்வை நூல்கள்**


1. ஸ்டீபன். ஞா. -2017: இலக்கிய இனவரைவியல், என்.சி.பி.எச்., சென்னை.
2. ஸ்டீபன் ஞா.2010: -தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும், என்.சி.பி.எச்., சென்னை.
3. சிவ சுப்பிரமணியன்.ஆ.2014: இனவரைவியலும் நாவலும், என்.சி.பி.எச்., சென்னை.
4. கா.சிவத்தம்பி 2010: பண்டைத் தமிழ்ச்சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,, சென்னை,
5. கா.சுப்பிரமணியன் 2011: சங்ககாலச் சமுதாயம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,, சென்னை,
6. தனஞ்செயன்.ஆ. 2014: தமிழ் இலக்கிய மானிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
7. பக்தவத்சல பாரதி, 1999: பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்ரம்.
8. பக்தவத்சல பாரதி,2014: இலக்கிய மானிடவியல், தமிழ் சமூகத்தின் செல் நெறிகளின் நிதானிய பண்பாட்டியல் பார்வை, புத்தாநத்தம்: அடையாளம்.

## 7. ஆய்வேடு

| L | T | P | C |
|---|---|---|---|
| 0 | 4 | 20 | 12 |

ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே ஆய்வேட்டுப் பணியை மேற்கொள்ள வேண்டும். ஆய்வேட்டை இரண்டாம் பருவத்தில் பல்கலைக்கழகப் பொது நடைமுறையின்படி துறையில் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் துறை ஆசிரியர் ஒருவரின் நெறிப்படுத்துதலின் கீழ் திட்ட ஆய்வேட்டுப்பணியை மேற்கொள்ள வேண்டும். நெறியாளர், மாணவர் ஒதுக்கீடு போன்றவை துறையின் முடிவின்பாற்பட்டது. ஆய்வேடு கணினி தட்டச்சில் 100 பக்கங்களுக்குக் குறையாமல் அமைய வேண்டும். 200 சொற்களுக்குக் குறையாமல் ஒரு பக்கம் என்பது அமைய வேண்டும். அக. புற மதிப்பீட்டு முறையும் வாய்மொழித் தேர்வும் ஆய்வேட்டிற்குப் பின்பற்றப்படும். பல்கலைக்கழகம் வகுக்கும் பொதுவான நடைமுறையின் அடிப்படையில் ஆய்வேட்டின் அக,புற மற்றும் வாய்மொழித் தேர்வுக்கானப் மதிப்பெண்கள் ஒதுக்கீடுகளாக அமையும்.